முருகப்பெருமான் துணை

**மகான் சந்திர பகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.12.2023, வியாழக்கிழமை

1. ஞான சூட்சுமம் உலகெலாம் நிரம்ப
ஞானிகள் பேரிலான பூசையுடன்
தானதருமமும் வழங்கி இனிதே
தரணி காத்திடும் அரங்கஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சோபகிருது தேள் திங்கள்
இனிமைபட மூவேழு திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 21 ம் நாள், 07.12.2023, வியாழக்கிழமை)
இயம்புவேன் சந்திர பகவான் யானும்
3. யானும் அறிவுரை ஆசியை
உலகம் பாதுகாப்புற உரைப்பேன்
ஞானமிலா சுயநலம் அபகரிப்பு
நம்பவைத்து மக்களை வஞ்சிக்கும்
4. வஞ்சிக்கும் தருமமிலா செயல்முறை
வளர்ந்தால் இந்த உலகில்
அஞ்சவே இயற்கை சீற்றம்
அளவிலா எழுந்து உலகினில்
5. உலகினில் அழிவை காட்டுமே
உயிர்காக்கும் அப்புவே மிஞ்சி
பலமிழக்க வேண்டி பலவாற்
பாய்ந்துமே அஞ்ஞானம் அழிய
6. அழியவே அழிவை காட்டும்
அதுகண்டும் அஞ்சாதிருக்கின்ற
வலிமை மிக்க ஆளுமை என
வரிந்துகட்டும் மாந்தர்கள் எல்லாம்

7. எல்லோரும் வகையறியா முடிவு
இனிவரும் காலம் கண்டிடுவர்
சொல்லவே ஞானவான்களை நாடி
சூட்சும சக்திபலம் அடைய
8. அடைய கலியுக மக்கள்
அரங்கமகானை நாடியே
தடையற தீட்சை ஏற்று
தருமவழி கடைப்பிடித்துவர
9. வருகவே ஆசாபாசமுடன்
வாரிச் சுருட்டி பதுக்கும்
கருமவினை செயல்கள்தானும்
கட்டாயம் விட்டு விலகி மாற்றம்
10. மாற்றம் உண்டாகி இனிதே
மக்களை மீட்கும் காக்கும்
ஆற்றல்மிக்க தலைமை தந்து
அனைவரும் சேவைபட நடக்க
11. நடக்கவே கலியுகம் தானும்
ஞானயுகமாக மாற்றம் பெறும்
இடரில்லா இயற்கை காப்புத்தர
இவ்வுலகம் அமைதி பாதுகாப்பும் பெறும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–